# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.249/2025 | Date | : 11.02.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.4** | Taluk | : |
| Name | : **கதிர்வேல்** | Calling | : |
| Father Name | : **கிருஷ்ணன்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.02.2026.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி மலையடிவாரத்தில் வசித்து TVS பாலம் அருகே டயர் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 11-10-2024 ம் தேதி, மதியம் சுமார் 12.30 மணியளவில் நான் சந்தைபேட்டை அருகே இருந்தபோது, போலிசார் அங்கு சுமார் ஒரு வாரம் முன்பாக அங்கு நடந்த திருட்டு சம்பந்தமாக விசாரித்துகொண்டிருந்தனர்.

2) அப்போது, போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், ரவி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2வது சாட்சி கையொப்பம் ரவி என்பவருடையது ஆகும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,

Sd/-Kathirvel

Judicial Magistrate No.1,

Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.249/2025 | Date | : 11.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.5 | Taluk | : |
| Name | : செங்கோட்டையன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.02.2026.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிசெய்து வருகிறேன். கடந்த 04-11-2024 ம் தேதி, நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திருச்செங்கோடு ஊரக காவல் நிலைய குற்ற எண்.242/2024, சட்டப்பிரிவு 303(2) of BNS-ன் கீழ் எதிரி பார்த்திபன், என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட இந்த வழக்கின் சொத்தான Splendor இருசக்கர வாகனத்தை கைப்பற்றி திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த வழக்கின் சொத்தை காவல் உதவி ஆய்வாளர் படிவம்-95 ன் மூலம் பெற்றுவர சொன்னதின் பேரில், மேற்படி இருசக்கர வாகனத்தை படிவம்-95 ன் மூலம் பெற்று வந்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Sengottaiyan